சென்னை, எழும்பூர் தாளமுத்து நடராசன் மாளிகையில் அமைந்துள்ள சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் – சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 282ஆவது குழுமக் கூட்டம் நேற்று (26.03.2025) நடைபெற்றது. இக்குழுமக் கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, பூச்சி எஸ்.முருகன், எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருமதி.காகர்லா உஷா, அன்சுல் மிஸ்ரா, டாக்டர் சு.பிரபாகர், அ.சிவஞானம், பா.கணேசன், குழும உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.டி.ஆர்.நாகராஜ் தலைமை!

முதல்வர் பிறந்த நாள்: அம்பத்தூர் கிழக்கில் மாபெரும் புகழரங்கம்!

எஸ்.ஜெகத்ரட்சகன் – கோ.விசுவநாதன் – எஸ்.பி.முத்துராமன் – நடிகர் நாசர் சிறப்புரை

சென்னை, மார்ச் 27 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 34, துறைதோறும் முன்னேற்றம்!! சூரியனே வழிகாட்டும்!! எனும் தலைப்பில் அம்பத்தூர் கிழக்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் 26.03.2025 புதன்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், கிரண் பேலஸ், கொரட்டூரில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ் தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே. மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, நீலகண்டன் எம்.சி, எல்.பி.எப்.மோகன், டாக்டர்.ஜி.சாந்தகுமார், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, ஜெ.பாலமுருகன், உஷாநாகராஜ், கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, து.ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சமிரங்கநாமி, மேனாம்பேடு இ.ராமு. வட்டச் செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோகநாதன், சு.மோகன்குமார் முன்னிலை வகித்தனர். மாபெரும் புகழரங்கம் - கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, வி.ஐ.பி பல்கலைக்கழகம் நிறுவனர் - வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன், திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், திரைப்பட கலைஞர் நடிகர் நாசர்ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கே.செல்வம், கோ. முத்துகுமாரசாமி, கோ.ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கோ.இன்பசேகரன், இ.நடராஜன், ஆர்.விமலன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம் வரவேற்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், சன்.முனியாண்டி, அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: கே.பொற்கொடிஎம்.சி, எம்.கமல் எம்.சி, எம்.இ.சேகர் எஸ்.உமா அம்பத்தூர் வடக்கு தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் திராவிடசெல்வம் க.முரளிபாபு க.கதிஜா மா.ரமேஷ் மு.நடராஜன் து.செல்வராஜ் ஆர்.கதிரவன் எஸ்.கவிதா செல்லதுரை கு.சங்கர் அம்பத்தூர் வடக்கு தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் வே.ரவிந்திரன் பு.வீரா வி.ராதாகிருஷ்ணன் மு.இரகு டி.கண்ணபிரான் த.பிரகாஷ்கு மார் சி.சீனிவாசன் நா.நெப்போலியன் இரா.டீக்கா அம்பத்தூர் வடக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் எம்.குணசேகரன் ப.மதி ஆ.இரா.அருண் கோ.சேகர்லால் பொன்.நவராஜ் ரவி க.ஜீவா எஸ்.பி.அரிகிருஷ்ணன் மா.குப்புசாமி எம்.ஹரிகிருஷ்ணன் எம்.முருகானந்தம் பி.வி.மூர்த்தி பொன் சேட்டு ஏ.கே.டி.பாஸ்கர் ஆர். ஜெயராமன் சோ.மதியழகன் எஸ்.எஸ்.சவரிமுத்து பா.மாறன் எஸ்.சுரேஷ்பாபு எஸ்.கே.சதீஷ்குமார் ஏ.வி.தட்சிணாமூர்த்தி, அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஏ.அன்சார் என்.ஸ்ரீதர் கே.எம்.ஷாம்சுந்தர் டி.பாலமுருகன் ஆர்.ஜானகிராமன் ஆர்.ஜெயபிரகாஷ் எ.விஜய் எஸ்.விஜயகுமார் அம்புரோஸ் விஜய்அமர்நாத் கே.மகேஷ் வி.எஸ்.தியாகராஜன் கு.சிவா கோ.சங்கரி ஆ.பிரகாஷ் டாக்டர்.சந்தோஷ் வடக்கு: கு.வேணுகோபால் பக்கீர்மொய்தீன் எஸ்.துரைகணேஷ் கே.பிரகாசம் ரா.மகேஷ்வரி யு.இலக்கியா எஸ்.ஜெயபாலன் எம்.இளங்கோ பி.பாலாஜி என்.மோகன் கே.அன்பரசு ச.கோவிந்த் பங்டர்.வி.சுதர்சன் க்டர்.பூபாலன் எஸ்.சிவண்முகம் வீ.பி.ரவீந்திரன் என்.ஸ்ரீதரன் ஆர்.பிரேம்குமார் எஸ்.பிரவீன்குமார் ஆ.நாதன் ஆ.பிரகாஷ் வி.மகேஷ்பாபு தெற்கு ஸ்னோபகிருஷ்ணமூர்த்தி ஆசைஆரோக்கியம் தில்மகேஷ் இரா.பாலசுந்தர் அசோக்ஆண்ரூஸ் பி.ஜெய பிரகாஷ் டி.ஸ்ரீதரன் வி.இராமு இரா.பாலமுருகன் ஏ.என்.ஆர்.செந்தில்குமார் எஸ்.அன்புச்செல்வன் எஸ்.பாண்டியன் ஜி.மெல்வின் ஜோதி எம்.எஸ்.ரமேஷ் கே.எஸ்.வரதராஜன் சி.லதா ஏ.கே.பி.கிருஷ்ணன் வி.மில்லன் மரியகலைசெல்வன் சா.மோக ன்ராஜ் எம்.பாலகிருஷ்ணன் (எ)அண்ணாதுரை சா.ஜெகநாதன் மு.க.அ.ரியாஸ்முகமது க.சத்தியநாராயணன் எம்.இ.சந்தீப் எல்.ஜெய்லான்ஸ் சுந்தர்ராஜன் த.சுரேஷ்குமார் அ.செல்வராஜ் ம அம்பத்தூர் கிழக்கு வடக்கு தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் JPR.ரகு இரவை.பிரபு எம்.வசந்தகுமார் ஆர்.கலாநிதி கு.கார்த்திக் தே.லோகுபிரகாஷ் லோ.திருநாவுக்கரசு மு.சூர்யா சீ.லோ.சரண்ராஜ் ச.ஷேக்அப்துல்லா கே.வி.சதீஸ் சு.இளங்கோவன் அ.முத்துகுமரன் சு.பிரசாத்குமார் ச.ஜெகதீஸ் ர.சந்தான கிருஷ்ணன் ர.பாலாஜி எஸ்.கே.கோவிந்தன் எஸ்.சௌந்தர்ராஜன்(எ)ராஜா எம்.மணிகண்டன் எ.வ.சாந்தகுமார் எம்.பி.சந்தோஷ் செ.சந்திரசேகர் பா.உதயகுமார் அம்பத்தூர் கிழக்கு வடக்கு தெற்கு பகுதி மாணவர் அணிசி.கோபிநாத் கோபிநாத் மகேஷ்குமார் பூ.கண்ணன் கே.மகேஷ்குமார் கோ.அமரன் அம்பத்தூர் கிழக்கு வடக்கு தெற்கு பகுதி மகளிர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் தரணிசீனிவாசன் எஸ்.அருள்செல்வி து.தமிழ்செல்வி ச.துளசி ம.விஜயா க.ஜானகி ம.மல்லிகா எஸ்.செண்பகபிரியா ச.பத்மா க.வசந்தா ம.ஷாலினி வி.வசந்தி சி.பிந்து அம்பத்தூர் கிழக்கு பகுதி மகளிர் தொண்டரணி அணிக.ஜெயந்திகனகராஜ் இரா.கோமதி ஜெ.சுகந்தி கோ.சரோஜா எ.வசந்தகுமாரி தா.மீனா கு.டில்லியம்மாள் சொ.விஜயலட்சுமி இரா.தேவிகா த.மகாலட்சுமி ஜெ.புனிதா த.சாந்தி வா.தங்கமணி அம்பத்தூர் கிழக்கு வடக்கு தெற்கு பகுதி வழக்கறிஞர் அணி சி.பாண்டியன் இரா.சிவசங்கர் ஆர்.மோகனசுந்தரம் நா.மணிவண்ணன் ஜெ.கோவிந்தராஜன் அம்பத்தூர் கிழக்கு பகுதி வர்த்தக அணி டி.ஞானமூர்த்தி ஆர்.பாபு ச.சுரேஷ் ஸ்ரீநாத் டி.சேகர் அம்பந்தூர் கிழக்கு பகுதி ஆதிதிராட நலபிரிவு அணி டி.முத்து சி.கல்யாணகுமார் எஸ்.டேவிட் பி.எழில்மணி சி.விஜய் வி.துரை எ.அசோகன் அம்பத்தூர் கிழக்கு வடக்கு தெற்கு பகுதி நாவல் தொழில் நுட்ப அணி இல.ரவிக்குமார் கோ.ரா.கோபிநாத் பா.அம்சவள்ளி கு.கிருஷ்ணகுமார் க.வைத்தி ஸ்வரன் து.மோனிஷா ஜெ.வெற்றிச்செல்வன் மா.ரஜேஷ்வரராவ் அ.நூரின்ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட செயலாளர்கள் மு.விஜய குமார், த.வ.லால் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து

தலைமைக் கழக அறிவிப்பு

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலம் பேரூரைச் சேர்ந்த எஸ்.கே.செந்தில்குமார் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26.03.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் தாலூகா கண்டோன்மென்ட்டில் உள்ள புனித தோமையர் மலை பகுதியில் மொழிஞாயிறு தேவநேய பாவணர் அவர்களுக்கு நினைவிடம் அமைப்பதற்கான இடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

ஒன்றிய பட்ஜெட்டும் தமிழ்நாடு பட்ஜெட்டும் ஒப்பீடு!

தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது மக்களுக்கானது. நமது தளபதி மக்களுக்கான திட்டங்களை பார்த்து பார்த்து செய்து வருகிறார். அதனால்தான் அவரைப் பார்க்க பொது இடங்களில் சாமானிய மக்கள் ஓடி வருகிறார்கள். தளபதி மக்கள் உறவு என்பது எதார்த்தமானது. அதில் ஒரு துளி கூட பொய்யில்லை என்பது அவரைப் பார்த்ததும் மக்கள் முகத்தில் தெரியும் சந்தோஷமே சாட்சி.

தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது மிகுந்த கவனத்துடன் சமூகத்தின் பல்வேறு பிரிவினர் நலன் சார்ந்து பல்வேறு பகுதிகளின் வளர்ச்சியை உள்ளடக்கிய ஒரு நேர்த்தியான நிதி நிலைய அறிக்கை அது. மாநிலங்கள் வளர்ச்சி தான் ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பதை புரிந்த திராவிட மாடல் ஆட்சி தளபதி ஆட்சி. இது ஒன்றிய பாஜக அரசுக்கு தெரிய வாய்ப்பில்லை. திராவிட மாடல் ஆட்சி மாநிலம் சார்ந்தது. மாநிலம் உள்ளடக்கிய தேசம் சார்ந்தது. தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையில் எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்வதற்கு எந்த விஷயமும் இல்லை. அது அவர்களுக்கு தெரிந்ததுதான். ஆனால் விமர்சனம் செய்யாவிட்டால் அரசியல் பிழைப்பு போய்விடும் என்ற அச்சம் காரணமாக ஏதோ சொல்கிறார்கள் பாவம். பாரதிய ஜனதாவை பொருத்தவரை அறிக்கை பற்றி அவர்கள் சொல்ல முடிந்து இரண்டு விஷயங்கள் தான். ஒன்று ரூபாய்க்கான குறியீட்டை தமிழ் எழுத்தின் மூலம் குறிப்பிட்டதை குறித்து எகிறி குதிக்கிறார்கள். ஏனென்றால் அவர்களைப் பொறுத்தவரை தமிழ் ஒரு பிடிக்காத வார்த்தை. அடுத்து மாநில அரசு கடன் அதிகரித்துள்ளது என்பது. மாநில அரசு கடன் அதிகரித்து உள்ளது என்பதை திராவிட மாடல் அரசு என்றுமே மறுத்து சொல்லியதில்லை. அந்தக் கடன் எந்த அளவுக்கு மக்களுக்கு பயன்படுகிறது என்பதை கடன் வாங்கி விட்டோம் என்று சொல்பவர்கள் சொல்ல மறந்து போகிறார்கள். தமிழகத்தில் வறுமையானது 1.64 சதவீதமாக குறைந்துள்ளது. வறுமை ஒழிப்பு என்று நேர்கோட்டில் தமிழக அரசு பயணிக்கிறது என்பதற்கான சாட்சி தான் இந்த புள்ளி விவரம். அடுத்த ஆண்டு தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும். இது தேசிய வளர்ச்சி வீதத்தை விட அதிகம். தனி நபர் வருமானம் 1.6 மடங்கு அதிகரிக்கும். உயர்கல்வி செல்வோர் எண்ணிக்கை தேசிய சராசரியை விட அதிகமாக இருக்கும். தளபதி ஸ்டாலினின் திராவிட மாடல் அரசு என்றுமே பிற மாநிலங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சியை அல்லது நல திட்டங்களை யோசிப்பதில்லை. திராவிடம் மாடல் அரசுக்கு போட்டியே இந்தியா தான். வளர்ச்சியில் தேசத்தின் வளர்ச்சியில் நாம் முதன்மையாக இருக்க வேண்டும் என்ற இலக்கோடு திட்டமிட்டு தான் இது நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

எஸ்.ரகுபதி
சட்ட அமைச்சர்

ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பொருளாதார அறிக்கையை தாக்கல் செய்வது வழக்கம். தமிழக அரசும் அதே போல் பொருளாதார அறிக்கையை சட்டசபையில் தாக்கல் செய்தது. இது எந்த மாநிலமும் யோசிக்காதது. இது இன்னும் சொல்லப்போனால் வெளிப்படையானது. எந்தத் துறையில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். எந்த விஷயத்தில் நாம் அக்கறை காட்ட வேண்டும். எங்கு நாம் பின்தங்கி இருக்கிறோம் போன்றவற்றை இந்த ஆய்வறிக்கை வெளிப்படையாக சொல்லி இருக்கிறது. தமிழகத்தின் பொருளாதார ஆய்வறிக்கை என்பது உண்மையின் உரைக்கல். இந்த அரசு வெளிப்படையான அரசு என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. தமிழ்நாட்டின் வளர்ச்சி மேலும் மேலும் என்று எல்லோரும் பாராட்டும் வகையில் இருக்கிறது. சர்வதேச இந்தியா வளர்ச்சி இவற்றோடு ஒப்பிடும்போது தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட எந்த அளவு உயர்ந்து இருக்கிறது என்பதற்கு இந்த பொருளாதார ஆய்வு அறிக்கை ஒரு ஆதாரம். தமிழ்நாட்டின் பொது விநியோக முறை, இலவச மின்சாரம், மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாதம்தோறும் உதவித் தொகை இப்படி மக்களின் அன்றாட பிரச்சனையை மாநில அரசு சுமந்து கொள்வதால் தமிழ்நாட்டில் விலைவாசி கட்டுக்குள் இருக்கிறது.

கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு இவற்றில் தமிழ்நாட்டின் வெற்றி எந்த அளவுக்கு என்பதைத்தான் நிதிநிலை அறிக்கை சுட்டிக் காட்டி இருக்கிறது. சிசு மரண விகிதம் தமிழ் நாட்டில் வெறும் நான்கு சதவீதம் தான், ஆனால் தேசிய சராசரி 28 சதவீதம். தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது ஒன்றிய அரசின் வரிப்பகிர்வில் ஜி எஸ் டி சிக்கல்கள் ஒன்றிய போதிய நிதி தராமல் ஏமாற்றுவது இதையெல்லாம் தாண்டி தான் தமிழகத்தின் வளர்ச்சி வியத்தகு வளர்ச்சி என்ற பாதையில் தளபதி அழைத்துச் செல்கிறார்.

தமிழக அரசு கடன் என்பது மாநில அரசின் கடன் வாங்கும் வரம்புக்குள் தான் இருக்கிறது என்ற உண்மை விமர்சனம் செய்யும் மேதாவிகளுக்கு தெரியும்தான். அரசின் பல திட்டங்களுக்கு ஒன்றிய அரசு பாரபட்சம் இல்லாமல் நிதி கொடுத்து இருந்தால் தமிழகத்தின் கடன் குறையும். மாநிலத்தின் உற்பத்தி வளர்ச்சி இவற்றையெல்லாம் மறந்து போய் விட்டு கடன் என்பதை மட்டும் இவர்கள் பேசுகிறார்கள். நமது தேசத்திற்கான ஜிடிபி பங்களிப்பில் தமிழ்நாடு ৯ சதவீதத்துடன் இரண்டாவது மாநிலமாக இருப்பதைப் பற்றி இவர்கள் பேசுவதே இல்லை.

சரி தமிழ்நாடு கடன் வாங்குவது ஒரு பக்கம் இருக்கட்டும் கடந்த பத்து ஆண்டுகளாக ஒன்றிய பாஜக அரசு வாங்கிய கடன் எவ்வளவு என்பதை பாஜக ஏன் பேசுவதில்லை ? நரேந்திர மோடி ஆட்சியில் ஒன்றிய அரசின் கடன் தொகை மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது. சென்ற ஆண்டு மார்ச் நிலவரப்படி 155.88 லட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்த ஆண்டு கூட 18 லட்சத்து 60 ஆயிரம் கோடி ஒன்றிய அரசு கடன் வாங்க இருக்கிறது. மத்திய அரசின் கடன் பற்றி பாராளுமன்றத்தில் பெரிய அளவு எந்தத் தகவலும் சொல்வதில்லை. அது பற்றிய விவாதத்துக்கும் ஒன்றிய பாஜக அனுமதிப்பதில்லை.

நிதி ஒதுக்கீடு கூட மாநிலங்களுக்கு ஒன்றிய பாஜக அரசு முறையாக செய்வதில்லை. இதை திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினால் ஆவேசப்பட்டு பாராளுமன்றத்தில் சாமி ஆடுகிறார் நிதி அமைச்சர். எல்லாமே பழைய டேப் மீண்டும் மீண்டும் மறுஒளிபரப்பு.

அதே சமயம் தமிழக அரசை விமர்சனம் செய்யும் வெத்து விமர்சகர்கள் அண்ணாமலை நாடாளுமன்ற நிலை குழுக்களின் அறிக்கைகளை கொஞ்சம் படித்துப் பார்ப்பது நல்லது. பெரும்பாலான துறைகள் திட்டமிட்ட இலக்கை எட்டவில்லை என்ற உண்மை அதில் தெரிகிறது. அதுமட்டுமல்ல தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியையும் அந்த துறைகள் சரிவர பயன்படுத்தப்படவில்லை என்பதே அந்த நிலைக் குழுக்களின் அறிக்கைகளாக இருக்கிறது. இந்த நிலை குழுக்களின் அறிக்கைகளை படித்ததன் மூலம் நமக்குத் தெரிந்தது ஒன்றிய பாஜக அரசின் நிதி நிலை அறிக்கை என்பது பரபரப்பான திட்டங்களை அறிவிப்பது என்பது வெறும் சம்பிரதாய சடங்கு என்று தெரிகிறது. இப்படி இருந்தால் பிரதமர் அடிக்கடி சொல்லும் மூன்றாவது பெரிய பொருளாதார நாடு என்பது வெறும் பேச்சாக தான் இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

2022-23 நிதி ஆண்டில் உணவு பதப்படுத்தும் துறைக்கு 282 கோடி ஒதுக்கப்பட்டு, அது 219 கோடியாக குறைக்கப்பட்டது. அப்படி இருந்தும் பயன்படுத்தப்பட்டிருப்பது 170 கோடி மட்டுமே. சென்ற நிதிநிலை அறிக்கையில் உணவுப் பதப்படுத்தும் துறைக்கு 60 திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டன. அவற்றில் 45 மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இதேபோல் 100 திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டு அவற்றில் 17 மட்டும்தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இந்திய உணவு பதப்படுத்தும் துறை சர்வதேச அளவில் போட்டி போட வேண்டும் என்பதற்காக உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை 2022இல் அறிவிக்கப்பட்டது. 2027 வரையிலான ஐந்தாண்டுகளில் அதற்காக 10,900 கோடி ஒதுக்கப்பட்டது. இதன்படி ஆண்டொன்றுக்கு 1800 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் வழங்கப்பட்டிருக்கும் ஊக்கத்தொகை வெறும் 1101 கோடி தான் .

இப்படி நிலை குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து பார்த்தபோது எந்த திட்டமும் இலக்கை எட்டுவதில்லை. எந்த ஒரு ஒதுக்கீடும் முறையாக செலவிடப்படுவதில்லை அல்லது பயன்படுத்தப்படுவதில்லை என்பது வெட்ட வெளிச்சம் ஆகிறது. ஒன்றிய அரசின் இந்த நிதி நிலை அறிக்கை என்பது ஏனோதானோ என்பதற்கு இதைவிட சாட்சி எதுவும் தேவையில்லை. அதுமட்டுமல்ல அரசுத் துறையில் பணியிடங்கள் நிரப்பப்படுவதில்லை. உயர் நீதிமன்றங்களில் 61 லட்சம் வழக்குகளும், விசாரணை நீதிமன்றங்களில் 4.62 கோடி வழக்குகளும் நிலுவையில் இருக்கும் நிலையில், 1,114 நீதிபதி பணியிடங்களில் 332 பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை. ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை என்பது ஒரு சடங்கு சம்பிரதாயம் என்பதற்கு இதைவிட உதாரணம் தேவையில்லை. ஆனால் தமிழகத்தின் நிதிநிலை அறிக்கை மக்கள் நலன் சார்ந்தது மக்களுக்கானது. தளபதியின் திராவிட மாடல் அரசு இது என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை.

ஆவடி அனைத்து பள்ளிவாசல் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ரமலான் சமூக நல்லிணக்க நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு நோன்பு தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். உடன் மாநகர மேயர் கு.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி செயலாளர்கள் ஜி.நாராயணபிரசாத், பொன் விஜயன், பேபிசேகர், விமல் வர்ஷன், சத்யா கோ.ரவி, வினோத்குமார் உள்பட பலர் உள்ளனர்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக விவேகானந்தர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாநில அளவில் நேற்று (26.03.2025) நடைபெற்ற இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை உயர் அதிகாரிகள் மரு.பி.சந்தர மோகன், முனைவர் பூ.ஆ.நரேஷ், திருமதி கே.சசிகலா, ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.